விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 174 வள்ளுவர் ஆண்டு 2057 வைகாசி 28 வியாழக்கிழமை (11.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

ஈரான் மீது அமெரிக்கா அதிரடித் தாக்குதல்



(8 ஆம் பக்கம் பார்க்க)

## உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுடன் சுரேஷ் சலேவுக்கு தொடர்புண்டு

பாராளுமன்றில் அமைச்சர் விஜேபால பகிரங்கம்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு 3 வாரத்துக்கு முன்னர் சுரேஷ் சலே, நீர்கொழும்பு பகுதிக்கு நான்கு பேரை அனுப்பி, கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் விசேட பூஜையில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட தகவல்களை திரட்டியுள்ளதாக பொதுமக்கள் பாது 02ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப்புதைகுழி
## 21 ஆம் நாள் அகழ்வில் புதிதாக 12 என்புக்கூடுகள்

(யாழ்ப்பாணம்)



செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணியில் நேற்றுடன் 339 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட 15ஆம் பக்கம் பார்க்க

# பிரபாகரனின் மகனை கொன்றது யுத்தக் குற்றம்

பாராளுமன்றில் ரவூப் ஹக்கீம்



(கொழும்பு)

ஜே.வி.பி.தலைவர் ரோஹண விஜேவீர கொல்லப்பட்டபோது அவரது மகன் கொல்லப்படவில்லை. சஹ்ரான் உயிரிழந்தபோதும் அவரது மகள் பாதுகாப்பாக இருக்கின்றார். அப்படியானால் பிரபாகரன் கொல்லப்பட்டபோது மட்டும் ஏன் அவரின் மகனான சிறுவன் பாலச்சந்திரன் கொல்லப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பினார். (02 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். போதனாவில் இடம்பெற்ற தீ விபத்து

விசாரணை முடிவு விரைவில்

(கொழும்பு)

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையின் மருந்து களஞ்சியத்தில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பில் உரிய விசாரணை நடத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார 15ஆம் பக்கம் பார்க்க

## நெதர்லாந்து
## தொல்லியலாளர்கள் வடக்கில் கள ஆய்வு



(யாழ்ப்பாணம்)

தொல்லியல் திணைக்களத்தின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள 15ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சங்கீத்தன் தடுத்து வைக்கப்படவில்லை

சிறிதரன் எம்.பியிடம் ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



(கொழும்பு)

சங்கீத்தன் மீது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கப்படாமையால் அவரைச் சாதாரண நீதிமன்ற நடவடிக்கைக்கு அமைவாக விடுவிக்க முடியும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சொல்லிசைக் கலைஞரான சங்கீத்தனின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் 15ஆம் பக்கம் பார்க்க

## நீதிபதி அலெக்ஸ்ராஜா இடமாற்றம் அரசியல் தலையீடுகள் ஏதுமில்லை

நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அலெக்ஸ்ராஜா இடமாற்றம் செய்யப்பட்ட விவகாரத்தில் எதுவித அரசியல் தலையீடுகளும் இடம்பெறவில்லை என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வில்இதுகுறித்துமேலும் கருத்துரைத்த அவர்,

நீதிபதி அலெக்ஸ்ராஜா அவர்களின் இடமாற்றம் தொடர்பிலும் எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுகளை முன் 15ஆம் பக்கம் பார்க்க

## சங்கீத்தனை விடுவிக்கக் கோரி கொழும்பில் போராட்டம்




15ஆம் பக்கம் பார்க்க

அன்பு வாசகர்களே! தரிசனம் திங்கள் (15) வெளிவரும்....

## தொல்லியல் ஆய்வுக்கு காரைநகரில் எதிர்ப்பு

(காரைநகர்)

காரைநகர் வேரப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள காரைநகர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்குச் சொந்தமான காணியில், தொல்லியல் திணைக்கள அதிகாரிகளும் வெளிநாட்டு நிபுணர்களும் இணைந்து தொல்லியல் அகழ்வாராய்ச்சி மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ள முற்பட்ட வேளையில் அங்கு பெரும் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் தொல்லியல் ஆய்வுகள் என்ற பெயரில் 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிரபாகரனின்...

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன் கிழமை (10) இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் விதிகள் மற்றும் அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

"பிரபாகரனின் மகன் படுகொலை சனல் 4 ஆவணப்படம் பொய்கூறுகிறது. பிரிட்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் நிராகரிக்கின்றது" என்று ஒரு பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது. அதாவது சனல் 4 ஊடகம் வெளியிடும் ஆவணப்படத்தில் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் கொல்லப்பட்டமை தொடர்பான விடயங்கள் உள்ளன. பாலச்சந்திரன் தொடர்பான படங்கள் பல வெளிவந்துள்ளன. முதலில் பதுங்குகுழியில் உணவுடன் அமர்ந்திருப்பதை போன்ற படம் உள்ளதுடன், அடுத்த படத்தில் அவரின் உடல் துப்பாக்கி சன்னங்களின் ஓட்டைகளுடன் கிடக்கும் படம் உள்ளது. எவ்வாறாயினும் இவ்வாறு நடக்கக்கூடாது. மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோஹண விஜேவீர கொல்லப்பட்டபோது அவரது மகன் கொல்லப்படவில்லை. அவரின் குடும்பத்திற்கு அரசாங்கம் பாதுகாப்பை வழங்கியது.

அதுபோல சஹ்ரான் உயிரிழந்த போதும் அவரது மகள் பாதுகாப்பாக இருக்கின்றார். அவ்வாறானால் பிரபாகரனின் மகன் மட்டும் ஏன் கொல்லப்பட்டார்? அவருக்கு மட்டும் ஏன் இவ்வாறு நடந்தது? இது தொடர்பில் ஏன் விசாரணை நடத்தப்படவில்லை? உண்மையில் போர்க் காலத்தில் பிரபாகரனின் மகன் கொலை செய்யப்பட்டிருந்தால், அது யுத்தக்குற்றமாகக்கருதப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும் என்றார். (ந-7)

# சுதந்திரபுரம் படுகொலையின் 28ஆம் ஆண்டு நினைவேந்தல்

(முல்லைத்தீவு)

கடந்த 1998ஆம் ஆண்டு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் பகுதியில் விமானத் தாக்குதல் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட ஷெல் தாக்குதல்களில் அநியாயமாக படுகொலை செய்யப்பட்ட 33 அப்பாவிப் பொதுமக்களு டைய 28ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று (10) உணர்வு பூர்வமாக இடம் பெற்றது.




தாயக நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் நிரோஜன் விளையாட்டுக்கழக மைதானத்தில் சஜந்தன் தலைமையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விசேட நினைவிடத்தில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

இவ் அஞ்சலி நிகழ்வில் பொதுச் சுடரினை குறித்த தாக்குதலில் தனது சகோதரியினை இழந்த பெண் ஒருவர் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து ஏனையவர்களும் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதுடன் அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் வே.கரிகாலன் மற்றும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் ஜீவராசா மற்றும் குறித்த தாக்குதலில் தங்களுடைய உறவுகளைப் பறிகொடுத்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (ந-7)

## உயிர்த்த...

காப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இது குறித்து பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர்,

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை நடத்திய தற்கொலை குண்டுத்தாரிகளுடன் சுரேஷ் சலே நேரடியாகத் தொடர்புகளைக் கொண்டிருந்தார்.

அதேபோன்று, குண்டுத்தாக்குதலுக்கு உதவி, ஒத்தாசை வழங்கியுள்ளமையும் விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நீர்கொழும்புப் பகுதிக்கு அனுப்பப்பட்ட நான்கு பேரில் ஒருவர், இஸ்லாம் அடிப்படைவாதி என்றும் அவர் ஐ.எஸ்.எஸ் அமைப்பைச் சேர்ந்தவர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

எனினும், அவர் தற்போது வரை காணாமல் போயுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தாக்குதல் நடத்தப்படும் வரை இஸ்லாம் அடிப்படைவாதிகளை பயன்படுத்தி, பல்வேறு சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டமை விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அது மாத்திரமன்றி உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்ள அதிர்ச்சியூட்டும் உண்மைகளும் முக்கிய விபரங்களும் வெளியில் கசிந்துவிடக்கூடாது என்பதற்காக, மிக முக்கியமான மற்றும் இரகசியமான தகவல்கள் வெளிவருவதைத் தடுப்பதற்கான தகுந்த நடவடிக்கைகளை சுரேஷ் சலே முன்னெடுத்திருந்தார் என்றும் அமைச்சர் குற்றம் சாட்டினார். (ந-7)


## இந்திய சாஸ்திரியார் வருகை


சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ்
ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார்
அவர்கள் யாழ்.வருகை, ஜாதகம், கைரேகை, எண் கணிதம்
மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில்
தொடங்க, திருமணத் தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில்
பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை,
குழந்தைப் பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில். (C-5810)

074 196 4945, 076 682 7368

இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

பிறப்பு 01 - 10 - 1955



இறப்பு 08 - 06 - 2026

## இளையதம்பி வேலாயுதபிள்ளை

பிள்ளையார் கோவிலடி பழவளவைப் பிறப்பிடமாகவும் வள்ளுவத்தை பன்னாலை தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி வேலாயுதபிள்ளை அவர்கள் கடந்த (08.06.2026) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தர்மினி மற்றும் ஊர்மிளா (பிரான்ஸ்), துஸ்யந்தன் (பிரான்ஸ்), பிரகாஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மயூரன், பவித்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கனகேஸ்வரி, கதிர்காமத்தம்பி மற்றும் நாகேஸ்வரி (இலங்கை), பரமேஸ்வரி (கனடா), ஞானேஸ்வரி (கனடா), புகனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் நாகம்மா (இலங்கை), காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, ஐயாத்துரை, செல்வராசா மற்றும் கதிர்காமத்தம்பி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பராசக்தி, யோகராஜா, காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை, இராஜேஸ்வரி, அழகேஸ்வரி மற்றும் சரஸ்வதி, கணேசராஜா, நாகராஜா, சிவராஜா, விமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் நவீன் (பிரான்ஸ்), நதீன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2026) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வயாவிளான் பூநயன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கனனி வீதி,
வள்ளுவத்தை பன்னாலை,
தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்
077 199 9655

(7829)


## சோதிடர் தேவை

சமூக சேவை நோக்குடன்
யாழ்ப்பாணத்தில் இயங்கும்
கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவைக்கு
திருமணப் பொருத்தம் பார்ப்பதில்
சிறப்புத் தேர்ச்சியுடைய
சோதிடர் தேவை.
(ஆண், பெண் இருபாலாரும்
விண்ணப்பிக்கலாம்)

தொடர்புகளுக்கு :
076 097 3121


## பேராசிரியர் அழகையா துரைராஜா அவர்களின் 32ஆம் ஆண்டு நினைவு தின வைபவம் - 2026

காலம் : 11.06.2026 வியாழக்கிழமை
நேரம் : மு.ப 10.00 மணி
இடம் : யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பேராசிரியர் அ.துரைராஜா நினைவு மண்டபம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்

(C-5813)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பயங்கரவாத தடைச் சட்டத்தை இலங்கை முழுமையாக நீக்க வேண்டும்



## கனடாவின் பிரம்டன் நகரமேயர் வலியுறுத்து

**(ஒட்டாவா)........................................**

**தன்னிச்சையான கைதுகளுக்கும் சித்திரவதைகளுக்கும் வழிவகுக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இலங்கை அரசாங்கம் உடனடியாக முழுமையாக நீக்க வேண்டும் என்று கனடாவின் பிரம்டன் நகர மேயர் பெட்ரிக் பிரவுண் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், 24 வயதுடைய தமிழ் ஹிப் ஹொப் கலைஞர் சங்கீத்தன் கணேஸ்குமார் கைது செய்யப்பட்டமைக்கு அவர் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாக பலமுறை உறுதியளித்த போதிலும், மாற்றுக்கருத்துக்களை ஒடுக்குவதற்காக இந்தச் சட்டத்தை அவர்கள் தொடர்ந்து ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

2009ஆம் ஆண்டு தமிழினப்படுகொலையின் உச்சக்கட்டத்திற்குப் பின்னரும், தமிழர்கள் இன்னும் தீவிர இராணுவக் கண்காணிப்பு மற்றும் முறையான ஒடுக்குமுறையின் கீழேயே வாழ்ந்து வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட கலைஞரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ள மேயர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக ஒழிக்குமாறு சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து தானும் வலி யுறுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டம் சர்வதேச மனித உரிமைத் தரங்களுக்கு முரணானது எனத் தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, முறையான குற்றச்சாட்டுகள் இன்றி கைது செய்யப்பட்டுள்ள சங்கீத்தனை உடனடியாக விடுதலை செய்யுமாறுவலியுறுத்தியுள்ளது. (நி)

# 11 இளைஞர்கள் கடத்தல் விவகாரம்

## முன்னாள் கடற்படைத் தளபதிக்கு அழைப்பாணை

(கொழும்பு)

கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு, கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ளார்.



இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைக்காக இம்மாதம் 27ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அவருக்கு நீதிமன்ற அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (நி)

# தென் மாகாண முன்னாள் முதலமைச்சர் கைது

(கொழும்பு)

தென் மாகாண முன்னாள் முதலமைச்சர் ஷான் விஜயலால் டி சில்வா, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நிதி மோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகம் உள்ளிட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து நீண்ட காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த விசாரணைகளை அடுத்தே இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. (நி)

# வாகன சாரதிகளுக்கான புள்ளி குறைப்பு முறைமை

## செப்டெம்பர் முதல் அமுலுக்கு

(கொழும்பு)

இலங்கையில் வீதிப் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில், வாகன சாரதிகளுக்கான "புள்ளி குறைப்பு முறைமை" எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வீதிகளில் கவனக்குறைவாக வாகனம் ஓட்டுபவர்களைக் கட்டுப்படுத்தவும், சாரதி ஒழுக்கத்தை மேம்படுத்தவும் கடுமையான சட்ட அமுலாக்கம் அவசியம் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்த புதிய திட்டத்தின் கீழ், ஒவ்வொரு சாரதி அனுமதிப் பத்திரத்திற்கும் 24 புள்ளிகள் வழங்கப்படும்.

போக்குவரத்து விதிகளை மீறும் போது இந்த புள்ளிகள் குறைக்கப்படும்.

தொடர்ச்சியாக தவறுகளை இழைத்து புள்ளிகளை இழக்கும் சாரதிகளின் அனுமதிப் பத்திரம் தற்காலிகமாக ரத்துச் செய்யப்படும் என அவர் தெரிவித்தார். (நி)

### வருட இறுதிக்குள்

# 31,000 ஆசிரியர்கள் சேவையில் இணைப்பு

## கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில், இந்த ஆண்டு இறுதிக்குள் 31,000 இற்கும் அதிகமான புதிய ஆசிரியர்களைச் சேவையில் இணைத்துக் கொள்ள கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.


தற்போது நாடு முழுவதும் சுமார் 44,000 ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவி வரும் பின்னணியில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கல்வியியல் பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக, முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் முறையான அனுமதியை வழங்கியுள்ளது.

இந்த ஆட்சேர்ப்புப் பணிகள் அனைத்தும் அந்தந்த மாகாண சபை மட்டங்களில் இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்தப்படும் என கல்வி அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. (நி)

# மாகாண சபைத் தேர்தலை பிற்போடும் எண்ணம் இல்லை

## பிரதமர் ஹரிணி அமரசூரிய உறுதி



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோது, பிரதமர் இந்த விடயத்தைத் தெளிவுபடுத்தினார்.

மாகாண எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்று, அதற்கு பாராளுமன்ற அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னரே தேர்தல் தினம் தொடர்பான அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட முடியும் என அவர் குறிப்பிட்டார்.

தற்போது நடைமுறையில் உள்ள மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் காரணமாகவே தேர்தலை நடத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். இந்நிலையில், தற்போதைய சட்டத்தை மாற்றி புதிய முறைமையில் தேர்தலை நடத்துவதா அல்லது தேவையான திருத்தங்களைச் செய்து பழைய முறைமையிலேயே தேர்தலை நடத்துவதா என்பது குறித்து ஆராய்வதற்காக பாராளுமன்றத்தின் ஊடாக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும், தேர்தலை பிற்போடுவதற்கான நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய வலியுறுத்தினார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




### தெற்காசியமட்ட கூடைப்பந்தாட்டம்

## இலங்கை தேசிய அணிக்கு யாழ். மாணவி தெரிவு




தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான 18 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில், இலங்கை தேசிய அணி சார்பாக விளையாடிய யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடக் கல்லூரி மாணவி லூட்சி றெஜினஸ் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

தெற்காசிய மட்ட கூடைப் பந்தாட்டப் போட்டியில் இலங்கை தேசிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி, வட மாகாண பாடசாலை மாணவி ஒருவர் தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதல் முறையாகும். இலங்கையில் நடைபெற்ற இந்தப் போட்டியின் இறுதிப் போட்டியில் இந்திய அணியுடன் மோதிய இலங்கை அணி, இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளது. தேசிய அணிக்குத் தெரிவாகி சாதனை படைத்த மாணவி லூட்சி றெஜினஸின் பயிற்சியாளராக தனுஷ் ராஜசோபனா செயற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

### கே.சீ.சீ வெற்றிக் கிண்ணம்

## விக்டோறி அணி 2 ஆவது சுற்றுக்கு தகுதி

கே. சீ.சீ வெற்றிக் கிண்ணத் தொடரின் மேல் பிரிவினருக்கான 3 ஆது போட்டி விக்டோறி அணிக்கும் டிறிபேக் ஸ்ரார் அணிக்கும் இடையே கடந்த 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று JDLA மைதானத்தில் நடைபெற்றது.

குறித்த போட்டியில் விக்டோறி அணி டிறிபேக் ஸ்ரார் அணியை 5 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்டோறி அணி 30 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது.

பிரணவன்-15, சரத்குமார்-35, சின்துயன்-18, பிரசாத்-40, கணேசநாத்-11, பிரியங்கன்-17, வேணுதாஸ்-19 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் டிறிபேக் அணியைச் சார்ந்த சுகிர்தனன் 31 ஓட்டங்களை கொடுத்து 4 இலக்குகளையும், தசின்தன் 19 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், சங்கீதன் 28 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

190 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய டிறிபேக் ஸ்ரார் அணி 30 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றனர்.

தசின்தன்-64, சிவரூபன்-11, தர்சன்-20, சுஜிந்தனன் ஆட்டமிழக்காது 40, சங்கீதன் -11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விக்டோறி அணியைச் சார்ந்த சிறிகஜன் 50 ஓட்டங்களையும், பிரசாத் 11 ஓட்டங்களையும், வேணுதாஸ் 32 ஓட்டங்களையும் கொடுத்து தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். மேற்படி போட்டியில் வெற்றி பெற்ற விக்டோறி அணியாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து 2ஆவது சுற்றில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

### முத்தரப்பு ரி–20 தொடர்

## இலங்கையை 8 ஓட்டங்களால் வீழ்த்தி இந்தியா த்ரில் வெற்றி

தம்புளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் தொடரின் விறுவிறுப்பான தொடக்க ஆட்டத்தில், இந்தியா 'ஏ' அணி இலங்கை 'ஏ' அணியை எட்டு ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

போட்டியில் முதலில் துடுப்பாட்டம் செய்யத் தீர்மானித்த இந்தியா 'ஏ' அணிக்கு, தொடக்க ஆட்டக்காரர்களான வைபவ் சூர்யவன்ஷி மற்றும் பிரப்சிம்ரன் சிங் ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்ததால் ஆரம்பத்திலேயே பின்னடைவு ஏற்பட்டது.


ஆனால், ருதுராஜ் கெய்க்வாட் ஒரு சிறப்பான சதம்(101) அடித்து, இந்தியா 'ஏ' அணி 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 277 ஓட்டங்கள் எடுக்க உதவினார்.

பதிலுக்கு ஆடிய இலங்கை 'ஏ' அணி, கிட்டத்தட்ட இன்னிங்ஸ் முழுவதும் இலக்கைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது போல் தோன்றினாலும், இறுதியில் தடுமாறியது.

கடைசியில் 48.5 ஓவர்களை மாத்திரம் எதிர்கொண்டு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 269 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

இலங்கை 'ஏ' அணியின் தலைவர் சஹான் அரச்சிங்கேயின் 74 ஓட்டங்கள் வீணானது.

இந்தியா 'ஏ' அணியில், சுழற்பந்து வீச்சாளர்களான ஆயுஷ் படோனி, அனுகுல் ராய் மற்றும் விப்ராஜ் நிகம் ஆகியோரும், வேகப்பந்து வீச்சாளர் அர்ஷ்த் கானும் தலா இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். (3)




### மாகாண மட்ட கயிறு இழுத்தல் போட்டி

## யாழ்ப்பாணம், வவுனியா அணிகள் சம்பியன்





வடமாகாண அணிகளுக்கு இடையிலான மாகாண மட்ட கயிறு இழுத்தல் போட்டியில் யாழ் மாவட்டம் மற்றும் வவுனியா மாவட்ட அணிகள் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வடமாகாண விளையாட்டு திணைக்களம் நடத்தும் மாவட்டங்களுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.


ஆண்களுக்கான போட்டியில் நீண்ட காலமாக சம்பியன் கிண்ணத்தை வென்ற வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மாவட்ட அணி மோதியது. இதில் பலத்த போராட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

மூன்றாம் இடத்தை கிளிநொச்சி மாவட்ட அணி பெற்றது.

பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து யாழ் மாவட்ட அணி மோதியது. இதில் வவுனியா மாவட்ட அணி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. மூன்றாம் இடத்தை கிளிநொச்சி மாவட்ட அணி பெற்றது. (3-90)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
14 . 10 . 1957

மறைவு
23 . 05 . 2025

சாவகச்சேரி வடக்கு மீசாலையை பிறப்பிடமாகவும்
ஜேர்மனி நூரன்போர்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். சின்னையா யோகராசா

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாக
(திதி – ஏகாதசி 11.06.2026)


அப்பா...
நீங்கள் சென்ற பாதை இன்னும் வீட்டில் ஒலிக்கிறது,
உங்கள் சிரிப்பு இன்னும் எங்கள் நினைவில் வாழ்கிறது.
ஒரு வருடம் ஆனாலும்,
உங்கள் அன்பின் வெப்பம் குறையவில்லை,
உங்கள் வார்த்தைகள் இன்னும் வழிகாட்டுகின்றன.
எங்கள் கண்களில் நீர் துளிகள் வந்தாலும்,
இதயத்தில் நீங்கள் என்றுமே உயிருடன் இருக்கிறீர்கள்.
நிழலாய் எங்களை காத்த அப்பா,
இன்று விண்மீனாய் எங்களை பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்.
நீங்கள் இல்லாத வெற்றிடம் நிரப்ப முடியாதது,
முதல் ஆண்டு நினைவுநாளில்
உங்களை மௌனமாக நினைத்து வணங்குகிறோம் அப்பா...

தகவல்:-
ரேகா குலத்துங்கன் (மகள்)

பிரிவால் வாடும்:
மனைவி, குடும்பத்தினர்

(2405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலய ஆரம்பக் கல்வி மாணவர்களின் சிறுவர் சந்தை நேற்றைய தினம் பாடசாலை வளாகத்தில் அதிபர் ப.கமலதாசன் தலைமையில் நடைபெற்றது.

## தொழிற்சந்தை

(யாழ்ப்பாணம்)

மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களமும் உடுவில் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கான தொழிற் சந்தை நிகழ்வானது இன்றைய தினம் காலை 9.30 மணிக்கு உடு வில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் தனியார் துறை வேலைவாய்ப்பு, உயர்கல்விக்கான வழிகாட்டல்கள், தொழில் சார் கற்கை நெறிகளுக்கான வழிகாட்டல், சுயதொழில் முயற்சி ஆலோசனைகள் என்பன வழங்கப்படவுள்ளன. (8)

# வெளிநாட்டவர்களை குறி வைக்கும் குழு சுன்னாகம் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

புலம்பெயர் தேசத்தில் இருந்து வருபவர்களிடமும் ஏனையோரிடமும் இருந்து ஏமாற்றி பணம் மற்றும் நகைகளை பறித்த ஒரு கும்பலைச் சேர்ந்த மூவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த குழுவில் கணவன், மனைவி மற்றும் மச்சான் ஆகியோர் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டில் இருந்து வருபவர்களை ஆசை வார்த்தை கூறி குறித்த பெண் ஒரு வீட்டுக்கு அழைத்து செல்வார்.

இதன்போது அவ் இடத்திற்கு வரும் கணவனும் அவரது மச்சானும் குறித்த இடத்திற்கு சென்று காணொளி பதிவு செய்து அவர்களை மிரட்டி பணம் மற்றும் நகை என்பவற்றை அபகரித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னரும் இதே பாணியில் ஒரு சம்பவம் இடம்பெற்ற நிலையில் அது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் அந்தக் குழுவினரை சுன்னாகம் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர். குறித்த பெண்ணுக்கு எதிராக ஏற்கனவே முறைப்பாடுகள் இருப்பதாகவும் அவர் போதைக்கு அடிமையானவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-104)



மக்கள் வங்கியின் "தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்" (ATM) யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் கன்னாதிட்டி மக்கள் வங்கியால் கடந்த 08 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார அதிகாரி பணிமனையும் பிரதேச சபையும் இணைந்து பிரதேச சபை எல்லைக்குள் காணப்படுகின்ற உணவு கையாளும் வியாபார நிலையங்களினை தரப்படுத்தி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் வியாபார நிலையங்களின் சுகாதாரம் மற்றும் கழிவகற்றல் உள்ளிட்ட ஏனைய விடயங்களினைக் கருத்தில் கொண்டு A, B, C எனும் அடிப்படையில் தரப்படுத்தி சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இச் செயற்பாடு உணவக உரிமையாளர்களை ஊக்குவிக்கும் முகமாகவும், பொது மக்களின் நன்மதிப்பினை பெற்று கொள்ளும் வகையிலும் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)

## கருவி நிறுவனத்தின் 13 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

வலுவிழப்புடன் கூடிய நபர்களுக்காக பணியாற்றி வருகின்ற கருவி நிறுவனத்தின் 13 ஆவது ஆண்டு விழா நிறைவு நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி தெற்கு பூதர்மடம் ஒழுங்கையில் அமைந்துள்ள கருவி நிறுவன நடுவப் பணியகத்தில் நடைபெறவுள்ளது.

கருவி நிறுவனத் தலைவர் க.சர்வானந்தா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் திருமதி சுஜீபா சிவதாஸ், கோப்பாய் பிரதேச வைத்திய அதிகாரி எஸ்.சிவகோணேசன், சுயாதீன ஊடகவியலாளர் எம்.நிலாந்தன்,, சட்டத்தரணி சோ.தேவராஜா, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி ஐ.எம்.முரளிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் கருவி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட வினாவிடைப் போட்டி வெற்றியாளர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

வெற்றியாளர்கள் விபரத்தினை கருவி நிறுவனத்தின் Facebook தளமாகிய Karuvi Differently Abled இல் பார்வையிட முடியும் என கருவி நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (8)

# நெளுக்குளத்தில் விபத்து இளைஞர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா, மன்னார் வீதி நெளுக்குளம் பகுதியில் நேற்று முன் தினம் இடம் பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், வவுனியா - மன்னார் வீதியில் நெளுக்குளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட வேளை வவுனியாவில் இருந்து நெளுக்குளம் நோக்கிச் சென்ற கார் ஒன்று பிறிதொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட நிலையில் இரண்டு வாகனங்களும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

விபத்தில் மோட்டர் சைக்கிளில் பயணித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (8-250)

## ஏழாலையில் புத்தக அரங்க விழா

(யாழ்ப்பாணம்)

மக்கள் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் 31 ஆவது நிகழ்வு 12, 13, 14 ஆம் திகதிகளில் ஏழாலை மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இப் புத்தக அரங்க விழாவின் முதல் நாள் மாலை நிகழ்வாக "ஈழத்து நூல்களை அறிவோம்" என்ற தொனிப் பொருளில் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் ஆசிரியரும் ஆய்வாளருமான சி. ரமேஸ் தலைமையில் நடைபெறும்.

மாலை 5 மணிக்கு சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில் மாவை நித்தியானந்தன் அவர்களின் எழுத்துருவில் ஆசிரியர் பு.கணேசராசாவின் நெறியாள்கையில் "முட்டை" மற்றும் "அரோகரா" ஆகிய நாடகங்கள் இடம்பெறும்.

மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் இடம்பெறும்.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மக்கள் கலை இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (8)



சி.சிறீ றங்கனின் "ஐயாள்" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை உரும்பிராய் கற்பக விநாயகர் மணி மண்டபத்தில் ஜீவநதி ஆசிரியர் க.பரணீதரன் தலைமையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சங்கீத்தனை உடனடியாக விடுவிக்க வேண்டும்

# இல்லையேல் வடகிழக்கில் பாரிய போராட்டம் வெடிக்கும்



## பாராளுமன்றத்தில் சிறீதரன் எச்சரிக்கை

**(கொழும்பு) ..............................**

**பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள பாடகர் சங்கீத்தனை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும், தவறினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தழுவிய ரீதியில் பாரிய போராட்டங்கள் வெடிக்கும் என்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் எச்சரித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற அவசர காலச் சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜே.ஆர். ஜயவர்தனவின் அடக்குமுறைப் பாதையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பயணிக்கக் கூடாது என்றும் அவர் இங்கு வலியுறுத்தினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஊடாக நாட்டில் மீண்டும் ஒரு கொடூரமான சூழல் உருவாகத் தொடங்கியுள்ளது.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் வைத்து, கிளிநொச்சி உதயநகர் கிழக்கைச் சேர்ந்த கணேஷ்குமார் சங்கீத்தன் என்ற இளம் பாடகர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்த பயங்கரவாத தடைச் சட்டம், கடந்த காலங்களில் சிங்கள மற்றும் தமிழ் இளைஞர்களை மிக மோசமாகப் பாதித்திருந்ததாகக் குறிப்பிட்ட சிறீதரன், இன்று ஆட்சியில் இருக்கும் ஜே.வி.பியினரின் 60,000 இற்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் ஜே.ஆர். ஜயவர்தன மற்றும் பிரேமதாச ஆகியோர் இந்தச் சட்டத்தையே கொடூரமாகப் பயன்படுத்தினர்.

அதேபோல், தமிழ் இளைஞர்களும் பல்லாயிரக்கணக்கில் இந்தச் சட்டத்தினால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு, சிறைகளில் அடைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர் என்றும் அவர் சபையில் தெரிவித்தார். (நி)


### மணிவிழா வாழ்த்து



திரு.
**திருப்பதி சுபாகரன்**
அவர்களுக்கு

ஒன்றொன்றாய் அகவையும் அறுபதினை
காண்புறும்
பண்முக ஆளுமை மேலுயர் நண்பனே
மணிவிழா வாழ்த்தினை மகிழ்வோடு
தன்தோள் தணியாது பணிதொடர் புலம்
நீடு வாழ்த்தும்.

(7826)

வாழ்த்துவோர்: இனிய நண்பன்
வ.இளங்கோ - சமரபாகு.



### வளர்ப்பு நாயைக் காணவில்லை



வெள்ளை, பிறவுண் நிற வளர்ப்பு நாயை ஆறுகால்மடம் காரைநகர் வீதியில் காணவில்லை. கண்டவர்கள் தயவுடன் தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

அ.விவேகானந்தன்
12/24 பொன்னையா லேன்,
ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை

(7456)

தொடர்பு : 074 342 4333



### மணிவிழா வாழ்த்துகள்



திரு. **இராசலிங்கம் சந்திரராஜ்**
*(பிரதி அதிபர்)*

எமது பாடசாலையில் கடமையாற்றி
2026.06.11 இன்றுடன் ஓய்வு பெற்றுச்
செல்லும் பாடசாலையின் பிரதி அதிபரும்
விஞ்ஞான பாட ஆசிரியருமாகிய
திரு.**இராசலிங்கம் சந்திரராஜ்** அவர்களை
கல்லூரிச் சமூகம் வாழ்த்துவதுடன் அவரது
ஓய்வுக்காலம் சிறக்க கடவுளின்
ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

சேவை விபரம்

- யா/வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம் - 2000.01.03 - 2010.06.20
- யா/சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயம் - 2010.06.21 - 2016.03.21
- யா/சென்றோக்ஸ் வித்தியாலயம் - 2016.03.22 - 2023.06.13
- யா/பூம்புகார் அ.த.க. பாடசாலை - 2023.06.14 - 2026.06.11

(7818)

BEST WISHES

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/பூம்புகார் அ.த.க. பாடசாலை.



### மணிவிழா வாழ்த்துகள்



திரு.**திருப்பதி சுபாகரன்**
(ஆசிரியர், யா/ஹாட்லி கல்லூரி,
பருத்தித்துறை)

எங்கள் ஊருக்கு 1985 ஆம் ஆண்டிலேயே
Dr. சுபாகரன் என்ற நாமம்
பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்..!
ஆசான் சுபாண்ணாவிடம் காணப்பட்ட
இளமைக்கால கமலஹாசனின் அழகும்
அளவுக்கு மீறிய பெற்றோரின் அன்பும்
இதய ஒலி எனும் கையெழுத்துச்
சஞ்சிகையின் ஆசிரியர் என்ற
முழுநேர அர்ப்பணிப்பும்
தன் கீழுள்ள மாணவர்களுக்கான விஞ்ஞானபாட
கற்பித்தலுக்கான தட்டிக்கொடுப்பும்
வொலிபோல் மீதிருந்த காதலும்
போராட்ட காலத்தில்
போராளிகள் கந்தப்பு,
ரமணன் போன்றோருடன் சேர்ந்து
வீதியோர தாளலய நாடக ஆற்றுகை அர்ப்பணிப்பும்
சினிமா மீது கொண்ட மோகத்தால்
"பாலைவனம்" எனும் திரைப்படத்தின் நடிப்பும் என
இன்னோரன்ன பலவிதமாய்
பொழுதைக் கழித்த ஆசான் சுபாண்ணா
நாற்பது ஆண்டுகள் கழித்து தன் மகன் மூலமாய்
சாதித்த சாதனைதான் Dr.பிரணவன்
என்னும் பிரசவிப்பு..!
வாழ்த்துகள் ஆசான் சுபாண்ணா..!

Congratulations


(7824)

வாழ்த்துவோர் – டாக்டர் க.வேலும்மயிலும், கொற்றை பி. கிருஷ்ணானந்தன்,
கா.செல்வஜோதி, வ.இராசலிங்கம், சி.இன்பராசா, சி.இன்பரூபன்,
வீ.வீரகுமார், சி.உதயச்சந்திரன், சி.உதயகுமார்.
(வல்வெட்டித்துறை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பாரதம்

# திரையுலகின் இமயம் சரிந்தது மீளாத் துயரில் தமிழ் சினிமா!



(டில்லி)

தமிழ் சினிமாவின் முன்னணி மற்றும் மூத்த இயக்குநரான "இயக்குநர் இமயம்" பாரதிராஜா 84 வயதில் காலமானார்.

கடந்த சில நாட்களாக உடல்நலக்குறைவு காரணமாக சென்னையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று அவர் காலமானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவரது மறைவு திரையுலகினரையும், ரசிகர்களையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த 1977ஆம் ஆண்டு வெளியான "16 வயதினிலே" திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமான பாரதிராஜா, தமிழ் சினிமாவுக்கு புதியதொரு இலக்கணத்தை எழுதினார்.

அதுவரை ஸ்டூடியோவுக்கு உள்ளேயே முடங்கிக் கிடந்த கமராவை, கிராமத்து வயல்வெளிகளுக்கும், மண் வாசனைக்கும் கொண்டு சேர்த்தார்.

'கிழக்கே போகும் ரயில்', 'சிகப்பு ரோஜாக்கள்', 'அலைகள் ஓய்வதில்லை', 'முதல் மரியாதை', 'கருத்தம்மா' என அவர் இயக்கிய திரைப்படங்களும் தமிழ் சினிமாவின் மைல்கற்களாக அமைந்தன.

"என் இனிய தமிழ் மக்களே" என்ற அவரது குரல் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

அவரது படைப்புகளுக்காக நாட்டின் உயரிய 'பத்மஸ்ரீ" விருது வழங்கி மத்திய அரசு அவரை கௌரவித்தது. இதுதவிர பல தேசிய, மாநில விருதுகளையும் பெற்றுள்ளார்.


பல முன்னணி நட்சத்திரங்களையும், இயக்குநர்களையும் அறிமுகப்படுத்தினார். அண்மைக் காலமாக பல்வேறு திரைப்படங்களில் சிறந்த குணச்சித்திர நடிகராகவும் தனது முத்திரையைப் பதித்தார்.

இந்நிலையில் அவரது மகனும் நடிகரும் இயக்குநருமான மனோஜ் பாரதிராஜாவின் மறைவு, பாரதிராஜாவை ஆழமாகப் பாதித்திருந்ததாக நெருங்கிய தரப்புக்கள் தெரிவித்திருந்தன.

கடந்த சில நாட்களாக கடும் உடல்நலக்குறைவால் அவதிப்பட்டு வந்த பாரதிராஜா நேற்று அதிகாலையில் காலமானார். இந் நிலையில் மறைந்த பாரதிராஜாவின் உடலுக்கு முழு அரசு மரியாதை வழங்கப்படுமென முதலமைச்சர் விஜய் அறிவித்துள்ளார். (3)

# அமெரிக்கா - ஈரா
# தொடங்கிய சரம

## கேள்விக்குறியா



(வோஷிங்டன்
ஹார்முஸ் நீ
அமெரிக்க ெ
ஈரான் சுட்டு வீ
அமெரிக்கா ஈ
களை மீண்டும்

ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து, அமெரிக்கப் படைகள் செவ்வாய்க்கிழமை அன்று மாலை 5 மணிக்கு தாக்குதல்களைத் தொடங்கின என்று அமெரிக்க மத்திய கட்டளை மையம் (சென்ட்காம்) தெரிவித்துள்ளது.

நியாயமற்ற ஈரானிய ஆக்கிரமிப்புக்கு தகுந்த பதிலடியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சென்ட்காம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பாரசீக வளைகுடாவின் கடற்கரை மற்றும் ஹார்முஸ் நீரிணை நெடுகிலும் குண்டு வெடிப்புகள் பதிவாகியுள்ளன.

விபத்துக்குள்ளான அமெரிக்க அப்பாச்சி ஹெலிகொப்டரின் இரண்டு பணியாளர்களும் அமெரிக்க கடல் ட்ரோன் மூலம் மீட்கப்பட்டதாக சென்ட்காம் தெரிவித்தது.

ஈரான் இந்தத் தாக்குதலை நடத்த ஒரு ட்ரோனைப் பயன்படுத்தியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஆனால், ஈரானிய ட்ரோன் வேண்டுமென்றே ஹெலிகொப்டரைத் தாக்கியதா என்பது தெளி

வாகத்
இ
ணுவ
தாக்கு
தைத்
ரான
அல்ல
லடி கெ
வெளி
அராக்
தார்.
டெ
டனுக்
உடன்
முயற்
இந்த

# பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் போராட்டத்தில் துப்பாக்கிச் சூடு

- 30 பேர் உயிரிழப்பு
- 200 இற்கும் மேற்பட்டோர் படுகாயம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் அரசுக்கு எதிராகவும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் மனித உரிமை அமைப்பினால் நேற்று நடத்தப்பட்ட போராட்டத்தில் பாகிஸ்தான் இராணுவத்தினால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.


இந்தத் தாக்குதலில் 30 பேர் உயிரிழந்ததாகவும் 200இற்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் அரசுக்கு எதிராகவும் மின்சாரம், உணவுப் பொருளில் மானியம் உட்பட 38 கோரிக்கைகளை முன்வைத்து ஆயிரக்கணக்கானோர் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறித்த காஷ்மீர் பகுதியில் நிலவி வரும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக பலவிதமாக கோஷங்களை எழுப்பினர்.

அவ்வேளை பாகிஸ்தான் இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் குறித்த பகுதியில் பதற்றமான சூழ்நிலை காணப்படுகிறது. (3)

# பாரதப் பிரதமராக நீண்
# பதவி வகித்த ே



(டில்லி)

பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவின் மிக நீண்ட காலம் பதவி வகித்த தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

இதன் மூலம், 1952 மே 13 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமராக முதன் முதலில் பதவியேற்று, 1964 மே 27 வரை பதவி வகித்த பண்டிட் ஜவஹர்லால் நேருவின் சாதனையை அவர் முறியடித்துள்ளார்.

பண்டிட் நேருவின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமராக இருந்த பதவிக்காலம் 4,398 நாட்கள் ஆகும்.

2014 மே 26 முதல் இன்று, 2026 ஜூன் 11 வரை, பிரதமர் மோடியின் தொடர்ச்சியான பதவிக்காலம் இப்போது 4,400 நாட்களாக உள்ளது.

இத
வின்
காலம்
தெடுக்
பெரு
140
மக்கள்
கலாச

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media



# வெளிநாடு

# ...ஈரான் இடையே மீண்டும் ...ஏவுகணைமாரித் தாக்குதல்கள்

## ...ரியான அமைதி ஒப்பந்தம்

(...ஷிங்டன்)

**...முஸ் நீரிணைக்கு மேல் பறந்த ...ரிக்க ஹெலிகொப்டர் ஒன்றை ... சுட்டு வீழ்த்தியதைத் தொடர்ந்து, ...ரிக்கா ஈரான் மீது தாக்குதல் ...மீண்டும் தொடங்கியுள்ளது.**



...வாகத் தெரியவில்லை.

இதேவளை, ஈரானிய இராணுவ இலக்குகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத் தியதாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து, ஈரானுக்கு எதிரான எந்தவொரு தாக்குதலுக்கோ அல்லது அச்சுறுத்தலுக்கோ பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி அமெரிக்காவை எச்சரித்தார்.

டெஹ்ரானுக்கும் வோஷிங்டனுக்கும் இடையில் ஒரு பரந்த உடன்படிக்கையை எட்டுவதற்கான முயற்சிகள் தொடரும் நிலையில் இந்த புதிய தாக்குதல் தொடங்கியுள்ளது.

இந் நிலையில் அமெரிக்கத் தாக்குதல்கள் குறித்த அறிவிப்பைத் தொடர்ந்து ஹோர்மோஸ்கான் மாகாணத்தின் கிழக்குப் பகுதி



களான குஹிஸ்டாக், கிரிக் மற்றும் மினாப் உள்ளிட்ட இடங்களில் பல வெடிப்புக்கள் நிகழ்ந்ததாக ஈரானின் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (3)

# தென்னாபிரிக்காவில் அரங்கேறிய துப்பாக்கிச் சூடு சம்பவம்

## 12 பேர் உயிரிழப்பு



(ஜோகன்னஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவின் பிரதான நகரான ஜோகன்னஸ்பேர்க்கில் நள்ளிரவில் அரங்கேறிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் 9 பேர் படுகாயமடைந்துள்ளதாக அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு ஜோகன்னஸ் பேர்க்கின் புறநகர்ப் பகுதியான கிளிவ்லேண் டில் உள்ள தற்காலிகக் குடியிருப்புகள் நிறைந்த பகுதி ஒன்றிலேயே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.


10இற்கும் மேற்பட்ட ஆயுதம் தாங்கிய சந்தேக நபர்கள் மினிபஸ் ஒன்றில் குறிப்பிட்ட குடியிருப்புப் பகுதிக்கு வந்துள்ளனர்.

வாகனத்திலிருந்து இறங்கிய அவர்கள், அங்கிருந்த பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு தப்பியோடியுள்ளனர்.

ஜோகன்னஸ்பேர்க் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சமீபகாலமாக இத்தகைய கூட்டுத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் கணிசமாக அதிகரித்து வருகின்றன.

இந்தத் துப்பாக்கிச் சூடுகள் பெரும்பாலும் அப்பகுதிகளில் சட்ட விரோதமாகச் செயற்பட்டு வரும் தங்கம் மற்றும் கனிமச் சுரங்கக் கொள்ளைக் கும்பல்களுக்கு இடையிலான மோதல்களுடன் தொடர்புடையவை எனப் பொலிஸார் கருதுகின்றனர்.(3)

# ...நீண்ட காலம் ...த மோடி



இதன் மூலம் அவர் இந்தியாவின் வரலாற்றில் மிக நீண்ட காலம் பதவி வகித்த தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் என்ற பெருமையைப் பெறுகிறார்.

140 கோடிக்கும் அதிகமான மக்கள்தொகையையும், மொழி, கலாசாரம், மதம் மற்றும் புவியியல் ரீதியாக அசாதாரணமான பன்முகத் தன்மையையும் கொண்ட இந்திய தேசத் தில், ஆட்சி நிர்வாகத்தின் அளவு மற்றும் சிக்கலான தன்மையைக் கருத்தில் கொள்ளும்போது, பிரதமர் நரேந்திர மோடியின் சாதனை குறிப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

சுதந்திரமான உலகளாவிய ஆய்வுகள், பிரதமர் மோடியை உலகின் மிகவும் பிரபலமான ஜனநாயகத் தலைவர்களில் ஒருவராகத் தொடர்ந்து தரவரிசைப்படுத்தியுள்ளன.

மேலும், 30 இற்கும் மேற்பட்ட நாடுகளின் உயரிய குடிமை விருதுகளும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன.(3)

# முறையான விமான ஓட்டுநர் உரிமமின்றி 900 வானூர்திகளை இயக்கிய விமானி கைது!

## கனடாவில் சம்பவம்




(ஒட்டாவா)

விமான ஓட்டுநர் உரிமம் ஏதுமின்றி, 17 ஆண்டுகளுக்கும் மேலாகப் பிரதம விமானியாகப் பணியாற்றிய ஒருவரைக் கனடா நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

2009ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், இவர் கனடாவிற்குள் உள்நாட்டு வான்பயணங்கள் உட்பட 900இற்கும் அதிகமான வான்பயணங்களை மேற்கொண்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, குறிப்பிட்ட இந்த காலப்பகுதியில் வர்த்தக விமானங்களை இயக்குவதற்கான முறையான உரிமமோ அல்லது சரக்கு போக்குவரத்து விமானங்களை இயக்குவதற்கான செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமோ இவரிடம் இருந்திருக்கவில்லை என அந்நாட்டுப் பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

இத்தகவல் வெளிவந்ததை அடுத்து, உடனடியாகச் செயற்பட்ட அந்நாட்டின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரிகள் அக்குறிப்பிட்ட நபரின் சேவையை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன், ஆயிரக்கணக்கான விமானப் பயணிகளின் உயிர்களை ஆபத்துக்குள்ளாக்கியமை தொடர்பாக அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள குருநகர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர்நோய் தடுப்பூசி கீழ் வரும் இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறும் ஓர் நாய்க்கான உரிமக் கட்டணமாக 100 ரூபாய் அறவிடப்படும் எனவும் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (8)

| திகதி | நேரம் | தடுப்புமருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 15.06.2026 | மு.ப9.00- மு.ப.11.00<br>மு.ப11.00- பி.ப.1.00<br>பி.ப2.30- பி.ப.4.00 | பழைய பூங்கா வீதி<br>புதிய வீடமைப்பு திட்ட வீதி<br>தொடர்மாடி குடியிருப்பு |
| 16.06.2026 | மு.ப9.00- மு.ப.11.00<br>மு.ப11.00- பி.ப.1.00<br>பி.ப2.30- பி.ப.4.00 | குருநகர் பொலிஸ் நிலையத்துக்கு அருகில்<br>பழைய பூங்கா சிறுவர் நீதிமன்றப்பகுதி<br>திருநகர் மாணவர் படிப்பகம் |
| 17.06.2026 | மு.ப9.00- மு.ப.11.00<br>மு.ப11.00- பி.ப.1.00<br>பி.ப2.30- பி.ப.4.00 | இராஜசிங்கம் வீதி மாதாசிலையடி பகுதி<br>சென்பற்றிக்ஸ் வீதி சேமக்காலை அருகில்<br>சென்பற்றிக்ஸ் வீதி கதிற்றல் வீதி சந்தி அருகில் |
| 18.06.2026 | மு.ப9.00- மு.ப.11.00<br>மு.ப11.00- பி.ப.1.00<br>பி.ப2.30- பி.ப.4.00 | இராஜேந்திரா வீதி<br>டேவிற் வீதி கடற்கரை வீதி சந்தி அருகில்<br>மவுண்காமல் வீதி பாங்சால் வீதி |
| 19.06.2026 | மு.ப9.00- மு.ப.11.00<br>மு.ப11.00- பி.ப.1.00<br>பி.ப2.30- பி.ப.4.00 | சென்றோக்ஸ் சனசமூக நிலையம்<br>றெக்கிள மேசன் சனசமூகநிலையம்<br>புதிய கடற்கரை தன்னீர்தாங்கி சந்தி |
| 20.06.2026 | மு.ப9.00- மு.ப.11.00 | நடமாடும் சேவை |
| 22.06.2026 | மு.ப9.00- மு.ப.11.00<br>மு.ப11.00- பி.ப.1.00<br>பி.ப2.30- பி.ப.4.00 | தண்ணீர் தாங்கி 4 ஆம் 5 ஆம் குறுக்குத்தெரு<br>சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை முன்பாக<br>2 ஆம் குறுக்குத்தெரு குருநகர் |
| 23.06.2026 | மு.ப 9.00- மு.ப.11.00<br>மு.ப11.00- பி.ப.1.00<br>பி.ப2.30- பி.ப.4.00 | ஜஸ்பிளான்ட் வீதி<br>குருநகர் சனசமூக நிலையம் முன்பாக<br>கடற்கரை வீதி 1 ஆம் குறுக்குத்தெரு சந்தி |
| 24.06.2026 | மு.ப9.00- முப.11.00<br>மு.ப11.00- பி.ப.1.00<br>பி.ப2.30- பி.ப.4.00 | பாங்சால் வீதி 4ஆம் குறுக்குத்தெரு சந்தி<br>யாகப்பர் ஆலயத்திற்கு அருகாமை<br>புதுமை மாதா ஆலயத்திற்கு அருகாமை |
| 25.06.2026 | மு.ப9.00- மு ப.11.00<br>மு.ப11.00- முப.12.00<br>பி.ப12.00- பிப.1.00<br>பி.ப2.30- பிப.4.00 | ஒடக்கரை வீதி<br>யூபிவி மகப்பேற்று நிலையம் முன்பாக<br>குருநகர் சின்ன ஆஸ்பத்திரி முன்பாக<br>செபஸ்தியார் கோவில் அருகாமை |

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தைவிலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 200 | 300 | 400 | 400 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | -- | -- | 200 | 330 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 | 400 | 500 | 450 |
| தக்காளி | 800 | 750 | 800 | 800 | 700 | 550 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 140 | 140 | 200 | 140 |
| கோவா | 250 | 300 | 260 | 260 | 300 | 180 |
| கரட் | 450 | 450 | 350 | 350 | 450 | 380 |
| பூசணி | 120 | 120 | 100 | 100 | 150 | 100 |
| புடோல் | 200 | 200 | 150 | 230 | 300 | 300 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 100 | 150 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 450 | 450 | 400 | 320 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | -- | -- | 240 | -- |
| பாகற்காய் | 1300 | 2000 | 200 | 2000 | 1600 | 900 |
| வெண்டக்காய் | 250 | 150 | 150 | 150 | 400 | 250 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 400 | 400 | 400 | 400 |
| பயற்றங்காய் | 350 | 200 | 250 | 300 | 200 | 250 |
| லீக்ஸ் | 400 | 480 | 400 | 400 | 400 | 320 |
| பீற்றூட் | 350 | 500 | 250 | 350 | 500 | 450 |
| கறிமிளகாய் | 600 | 500 | 400 | 400 | 450 | 400 |
| முருங்கைக்காய் | 600 | 700 | 450 | 450 | 800 | 600 |
| போஞ்சி | 650 | 600 | 450 | 450 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 350 | 150 | -- | -- | 300 | -- |
| கீரை – 1 பிடி | 150 | 50 | 110 | 110 | 100 | 100 |
| தேசிக்காய் | 600 | 400 | 400 | 400 | 450 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 120 | 120 | 100-140 | 80 |
| இராசவள்ளி | 400 | 450 | 350 | 350 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 650 | 500 | 420 | -- | 400 | -- |
| முள்ளங்கி | 250 | 300 | 180 | 180 | 250 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | -- | -- | 60 | 40 |
| வல்லாரை | 100 | 70 | -- | -- | 100 | 50 |
| ஈரப்பலா | -- | -- | -- | -- | 250 | -- |




யாழ்ப்பாணம் வடமராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு போட்டி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியபாலன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (படம்-மகாலிங்கம்)

## சரஸ்வதி விளையாட்டுக் கழக துடுப்பாட்டச் சமர்

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு, சரஸ்வதி விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான துடுப்பாட்ட சமர் -2026 எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளது.

பங்கு பற்ற விரும்பும் கழகங்கள் 077 907 3816 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும்.

குறித்த போட்டியில் முதலிடம் பெறும் அணிக்கு 50 ஆயிரம் ரூபாய் பணப் பரிசும் கேடயமும் மற்றும் இரண்டாமிடம் பெறும் அணிக்கு 35 ஆயிரம் ரூபாய் பணப் பரிசும் கேடயமும் வழங்கப்படவுள்ளது. (3)

# இராசிபலன்

11.06.2026
வைகாசி 28, வியாழக்கிழமை
ஏகாதசி முன்னிரவு 6.31 மணிவரை

அச்சுவினி பின்னிரவு 3.16 மணிவரை
சுப நேரம் -7.22-8.52 மணிவரை
இராகு காலம் -1.22-2.52 மணிவரை

சந்திராஷ்டமம்- அத்தம்
ஏகாதசி விரதம்.

**வளவன்**

**மேஷம்**
எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், கனவுப் பலிதமுண்டு, உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**கடகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்**
சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, கௌரவமான நாள்.

**மகரம்**
பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பகைப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**ரிஷபம்**
நண்பர்களின் சந்திப்பால் சுப விரயங்கள் ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்கள் ஏற்படலாம், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**சிம்மம்**
ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**
பொது வாழ்வில் புகழ் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்தமாக இருப்பீர்கள், திருமண முயற்சிகள் வெற்றி தரும்.

**கும்பம்**
நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும், உறவினர் வழியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**
எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், மற்றவர்கள் பாராட்டும் வகையிலான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள்.

**கன்னி**
குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**தனுசு**
கோரிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்**
தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

பிறருக்கு உதவி செய்வதே வாழ்க்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கை உட்பட 10 நாடுகளிலிருந்து வீட்டுப் பணியாளர்கள்

## குவைத் அனுமதி

(கொழும்பு)

குவைத்தின் வீட்டுப் பணியாளர் துறையை ஒழுங்குபடுத்துவதற்கும், அதன் மீதான கண்காணிப்பை வலுப்படுத்துவதற்கும் ஏதுவாக, வீட்டுப் பணியாளர் ஆட்சேர்ப்பு தொடர்பான புதிய சுற்றறிக்கை ஒன்றை அந்நாட்டின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதன்படி, இலங்கை உள்ளிட்ட 10 அங்கீகரிக்கப்பட்ட நாடுகளிலிருந்து மாத்திரம் வீட்டுப் பணியாளர்களைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் 27 நாடுகளிலிருந்து பணியாளர்களைத் திரட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வெளியுறவுத்துறை அமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் மனிதவள பொது அதிகாரசபை உள்ளிட்ட பல அரச நிறுவனங்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, இலங்கை, இந்தியா, பிலிப்பைன்ஸ், நேபாளம், வியட்நாம், எத்தியோப்பியா, எரித்திரியா, பெனின், தென்னாபிரிக்கா, செனகல் ஆகிய நாடுகளிலிருந்து வீட்டுப் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய முடியும். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
உயரம்:5'9"
தகைமை/தொழில்: BSC(QS), MSC (London)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16921

பிறப்பு:1986 இந்து
நட்சத்திரம்:கேட்டை
8 இல் செவ்
உயரம்: 6"
தகைமை/தொழில்:Degree, France
எதிர்பார்ப்பு: தகுதியானபெண்
தொ.இ: B/16922

பிறப்பு:1992 இந்து
நட்சத்திரம்:பூரம்
கி.பா:7 1/2
உயரம்:5'5"
தகைமை/தொழில்: A/L,Shop(own)
எதிர்பார்ப்பு: தகுதியானபெண்
தொ.இ: B/16923

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 30
7 இல் செவ்
உயரம்:5'4"
தகைமை/தொழில்: O/L, Shop(own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16924

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 22 1/4
உயரம்:5'6"
தகைமை/தொழில்: HNDA, DO
எதிர்பார்ப்பு: உத்தியோகம், பட்டதாரி
தொ.இ: B/16925

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996 RC
நட்சத்திரம்: திருவோணம்
11 இல் சூரி செவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L, Cashier(pvt)
எதிர்பார்ப்பு: வெளிநாட்டு மணமகன்
தொ.இ: G/16920

பிறப்பு: 2000 இந்து
நட்சத்திரம்: சுவாதி
9 இல் சூரி செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc,Software Engineer
எதிர்பார்ப்பு : படித்த தகுதியான ஆண்
தொ.இ: G/16928

பிறப்பு:1998 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 10 1/4
9 இல் சூரி செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Engineer,Doctor
தொ.இ: G/16930

பிறப்பு:1998 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 34
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSC, Banker
எதிர்பார்ப்பு : உத்தியோகம்
தொ.இ: G/16931

பிறப்பு:1998 இந்து
நட்சத்திரம்:கேட்டை
1 இல் செவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc, MA
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/16933

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 598



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நான் மட்டும் நல்லவன்!

ஒரு பெரியவர் வெளிநாட்டிலே கேள்விப்பட்ட கதை இது.

ஜான்சன் என்று ஒரு நபர். அவர் ஒருநாள் தன்னுடைய நண்பர்களுடன் சீட்டு விளையாடிக்கொண்டிருந்தார்.

அவர் தன்னிடம் இருந்த எல்லா பணத்தையும் சீட்டு விளையாட்டிலே தோற்றுவிட்டார். கையிலே மீதி எதுவும் இல்லை.

அடுத்த நாள் வரைக்கும் சாப்பிடுவதற்கு என்ன செய்வது? அதற்கும் வழியில்லை.

இவர் யோசித்துக்கொண்டிருந்தார். அப்போது அங்கேயிருந்த இவருடைய நண்பன் பிரவுன்... இவரிடம் வந்து... "கவலைப்படாதே... நாளைக்கு வரைக்கும் உன் செலவுக்கு நான் பணம் தருகின்றேன்... இந்தா இதை வைத்துக்கொள்" என்று சொல்லி ஒரு இருபது டொலரை அவனிடம் கொடுத்தார்.

ஜான்சன் அதை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போறார். அப்படி போய்க்கொண்டிருக்கின்ற வழியிலே வறுமையாலே கஷ்டப்படுகிற ஒரு பெண்ணைப் பார்த்தார். அழுக்கு ஆடை. சரியாக நடக்கக் கூட முடியவில்லை அந்தப் பெண்ணாலே! "ஐயா... நான் இன்றைக்கு நாள் முழுவதும் சாப்பிடவில்லை பட்டினி... நீங்கள் எனக்கு உதவி செய்யவில்லை என்றால் ஆற்றிலே விழுந்து இறந்து போய் விடுவேன்!" என்றாள்.

ஜான்சன் இரக்கமுள்ளவன். அவன் மனது ரொம்ப வருத்தப்பட்டது அவளுடைய நிலைமையைப் பார்த்து! "கவலைப்படாதே என்னிடம் இருபது டொலர் இருக்கின்றது. இதை நீ வைத்துக்கொள் இந்தா!" அப்படி என்று சொல்லி தன்னிடம் இருந்த இருபது டொலரை அந்தப் பெண்ணிடம் கொடுத்துவிட்டார்.

அவள் இந்தப் பணத்தை வாங்கிக்கொண்டு இவரை ரொம்பவும் நன்றியுடன் பார்த்தாள்!

"ஐயா.. மனித குலத்தின் மீது எனக்கு இருந்த நம்பிக்கை செத்துவிட்டது. அந்த நம்பிக்கைக்கு இப்போது நீங்கள் உயிர் கொடுத்து விட்டீர்கள். உங்கள் கருணையை நான் எப்போதும் மறக்க மாட்டேன்!" என்று சொல்லி விட்டு அவள் சென்றாள்

இவர் மனதுக்கு மிகவும் நிறைவாக இருந்தது. நமக்கு இன்றைக்கு சாப்பிடுவதற்கு ஒன்றும் இல்லை என்றால் கூட ஆற்றிலே விழுந்து சாக இருந்த ஒரு பெண்ணைக் காப்பாற்றி விட்டோம் என்று நினைக்கின்ற போது பசி கூட தெரியவில்லை. அவர் திருப்தியாக போனார். அன்றைக்கு எதுவும் சாப்பிடவில்லை. பேசாமல் படுத்துவிட்டார்.

மறுநாள் காலையிலே நிம்மதியாக எழுந்தான். வாசலிலே தினசரி பேப்பர் வந்து இருந்தது. எடுத்துப்பார்த்தான். முதல் பக்கத்திலே ஒரு செய்தி.

"ஆற்றிலே அடையாளம் தெரியாத ஒரு பெண்ணின் உடல் கண்டெடுக்கப்பட்டது!" என்று போட்டிருந்தது. அதற்குச் கீழே போட்டிருந்த விபரங்களெல்லாம் படித்துப் பார்த்தார்.

நேற்றைக்கு அவர் சந்தித்த அதே பெண் தான் என்பதை புரிந்து கொண்டான். அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

"என்ன நடந்தது நேற்றைக்கு. பணம் இல்லாததினாலே தானே ஆற்றிலே விழுந்து இறந்து போகப் போவதாக சொன்னாள். நாம் தான், உடனே இருபது டொலரைக் கொடுத்தோமே... பணம் இருந்தும் அவள் எதற்காக இறந்து போனாள். மனித குலத்தின் மேலே நம்பிக்கை இன்னும் இருக்கு என்று வேறு சொன்னாளே!"

இவர் யோசித்தார். ஒன்றும் புரியவில்லை. மறுநாள் மறுபடியும் அந்த சூதாட்ட விடுதியிலே சீட்டாடிக் கொண்டிருந்தான்..

சாப்பாட்டு நேரத்திலே முதல்நாள் பணம் கொடுத்து உதவி செய்தாரே பிரவுன் அவன் கேட்டான் இவனைப் பார்த்து:

"ஏனப்பா நேற்றைக்கு எங்களை விட்டுப் போனதும் நீ என்ன செய்தாய்?" என்று கேட்டான்.

"என்ன செய்தேன் வீட்டுக்குப் போனேன்!" என்றார் இவர்.

"நான் கொடுத்த பணத்தை ஏதாவது செலவு செய்தாயா?" என்றான்.

"இல்லையே... ஏன்?" என்றார்.

நல்லவேளை... நான் கொடுத்த 20 டொலரை நீ செலவு செய்திருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று நாங்கள் ஆச்சரியப் பட்டோம். ஏன் என்றால் நான் உன்னிடம் கொடுத்தது கள்ள நோட்டு!" என்றான் அந்த நண்பன்.

இதுதான் அந்தப் பெரியவர் (ஓஷோ) கேள்விப்பட்ட கதை. எதற்கு இதைச் சொல்கிறார் என்றால், "இந்த உலகம் ஊழல் மயமானது... இந்த உலகத்திலே நாமும் ஊழலுக்கு உட்பட்டுத்தான் ஆகவேண்டியிருக்கின்றது" என்பதை விளக்குவதற்காகத் தான்.

உயர்வான எண்ணங்கள்தான் நம்மைக் காப்பாற்றும். நாம் மட்டும் நல்லவனாக இருந்து விட்டால் போதும். நாம் செய்வது எல்லாம் நன்மையாக முடியும் - என்பது இன்றைய உலகத்திலே சாத்தியமில்லை!

நம்ம நண்பர் ஒருத்தன் சொன்னான்:

"என்றைக்கும் சொந்தக் காலிலே நிற்பது தான் சேர் நமக்கு கௌரவம். சுயதொழில் செய்ய வேண்டும். அரசாங்கத்தை எதிர்பார்க்கக் கூடாது - என்பது என்னுடைய இலட்சியம் சார். அதனாலே தான் சுயமாக ஒரு தொழிலை ஆரம்பித்தேன்.- கைது செய்து சிறையிலே அடைத்து விட்டார்கள் சேர்! என்றான்". என்னடா செய்தாய் என்றேன்.

அவன் மெதுவாக வந்து, "கள்ள நோட்டு அடித்தேன்!" என்றான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1062





ஆனால் அந்தச் சண்டாளி நாளை இந்த நேரம் வரையில் உயிரோடு இருப்பாளா என்று நான் சொல்லமுடியாது. ஜோதிடரே! நீர் சொல்ல முடியுமா? இராஜ குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எல்லோருடைய ஜாதகங்களும் உம்மிடம் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அது உண்மையா? நந்தினியின் ஜாதகம், நான் கிழ வயதில் அறிவு கெட்டு மணந்து கொண்ட மோகினிப் பேயின் ஜாதகம் இருக்கிறதா?"

ஜோதிடர் மேலும் பதறிப் போனவராய், "தனாதிபதி! இது என்ன சொல்கிறீர்கள்? என்னைச் சோதனை செய்கிறீர்களா? இளைய ராணியின் ஜாதகம் என்னிடம் இல்லை. அவர் பிறந்த நாளும் வேளையும் தாங்கள் தெரிவித்தால் ஜாதகம் கணிக்க முடியும்" என்றார்.

"வேண்டாம் வேண்டாம், நந்தினியின் ஜாதகத்தை நானே கணித்துக் கொள்வேன். அவளுடைய ஆயுளை நானே, என் கையினாலேயே, முடிவு கட்டத் தீர்மானித்து விட்டேன். மற்றவர்களுடைய ஜாதகத்தைப் பற்றித் தெரிந்தால் சொல்லுங்கள். சக்கரவர்த்தியின் ஆயுர்ப் பாவம் எப்படியிருக்கிறது? ஆகா! தலையை அசைக்கிறீர்! நீர் சொல்ல மாட்டீர். உம்மை நான் சோதிப்பதாகவே எண்ணுவீர். அல்லது உம்முடைய ஜோதிட சாஸ்திரம் எல்லாமே வெறும் புரட்டோ , என்னமோ, யார் கண்டது? ஜோதிடரே! ஜாதகம் ஒருபுறம் இருக்கட்டும். சில காலமாக வானத்தில் தோன்றிக் கொண்டிருந்த தூமகேது இன்று காலையில் வானத்திலிருந்து பூமியில் விழுந்து மறைந்ததே, அது உமக்குத் தெரியுமா? தெரிந்தால், அதன் பொருள் என்ன என்று சொல்லக் கூடுமா? அது ஏதேனும் பெரிய உற்பாதத்தைக் குறிப்பிடுகிறதா? சக்கரவர்த்திக்கோ, அவருடைய மக்களுக்கோ நேரப் போகிற விபத்தைக் குறிப்பிடுகிறதா? இதைக்கூட நீர் சொல்ல மறுப்பதாயிருந்தால் உம்முடைய ஜோதிடம் வெறும் புரட்டுத்தான்!"

"தனாதிபதி! அப்படி முடிவு கட்ட வேண்டாம். இராஜாங்க சம்பந்தமான காரியங்களில் ஜோதிடம் பார்க்கக் கூடாது என்பது எங்கள் தொழிலின் பரம்பரை மரபு. இன்று காலையில் தூமகேது விழுந்ததை நான் கண்ணால் பார்க்கவில்லை. ஏதோ ஜகஜ்ஜோதியான வெளிச்சம் தோன்றியதைக் கண்டு ஆச்சரியப்பட்டு உடனே எழுந்து வெளியில் சென்று பார்த்தேன். சில நாளாக வால் குறுகி வந்து கொண்டிருந்த தூமகேதுவைக் காணவில்லை. தூமகேது தோன்றுவதும் விழுவதும் அரசகுலத்தினர்க்கு அதிர்ஷ்டத்தைக் குறிப்பிடுவதாகச் சொல்லுவார்கள். ஆனால் அது ஜோதிட சாஸ்திரத்தைச் சேர்ந்ததல்ல. ஜனங்களின் தொன்று தொட்ட நம்பிக்கை. அதில் எனக்கு அவ்வளவாக நம்பிக்கை கிடையாது. இன்று காலையில் கூடச் சக்கரவர்த்தி சௌக்கியம் என்று தெரிந்து கொண்டிருக்கிறேன்."

"அது நமது அதிர்ஷ்டந்தான். இன்றிரவு சக்கரவர்த்திக்கு ஒன்றும் நேரிடாமலிருக்க வேண்டும். நாளை வரையில் அவர் சுகமாயிருந்தால் அப்புறம் கவலையில்லை. பொன்னியின் செல்வனைப் பற்றி ஏதேனும் தெரியுமா?

"நேற்றிரவு வெகு நேரத்துக்குப் பிறகு இளவரசர் திருவாரூர் வந்து சேர்ந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். தனாதிபதி! பதினாயிரம், இலட்சம் மக்கள் அவரைச் சூழ்ந்து வந்து கொண்டிருக்கிறார்களாம். அவருடைய விருப்பத்துக்கு விரோதமாக அவரைத் தஞ்சைக்கு அழைத்து வருகிறார்களாம்." "ஆகா! அவர்கள் மட்டும் இளவரசரைத் தஞ்சையில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டால் எவ்வளவோ நன்றாயிருக்கும்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பள்ளிக்குச் சென்ற சிட்டுக்குருவிகள்



(நேற்றைய தொடர்ச்சி)

தலைமையாசிரியை எதிரில் பார்த்தாள். "அம்மா அம்மா, நான் தான் சிட்டுக் குருவி" என்று கூறிப் படபட வென்று இறக்கையை அடித்துக் கொண்டது அம்மாச் சிட்டு.

தலைமையாசிரியை குனிந்து சிட்டைப் பார்த்தாள்.

"அம்மா வணக்கம்!" என்று கூறிக் கொண்டே சிட்டுக் குருவி அவள் காலில் வந்து விழுந்தது.

இந்தச் சிட்டு எதற்கு நம்மை வணங்குகிறது? என்று நினைத்தாள் தலைமை ஆசிரியை. "ஏ, சிட்டுக்குருவி, உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள் தலைமை ஆசிரியை.

"அம்மா, நீங்கள் என்மீது கருணை வைக்க வேண்டும். என் குஞ்சுகள் இரண்டையும் தங்கள் பள்ளிக் கூடத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும். தயவு செய்து தாங்கள் இதை மறுக்கக் கூடாது" என்று அம்மாச்சிட்டு கெஞ்சிக் கேட்டுக் கொண்டது.

தலைமை ஆசிரியைக்கு, அந்தச் சிட்டு மீது இரக்கம் ஏற்பட்டது. அதனால், அந்தச் சிட்டு, கேட்டுக் கொண்டபடி அதன் குஞ்சுகளைத் தன் பள்ளிக் கூடத்தில் சேர்த்துக் கொள்ள ஒப்புக் கொண்டாள்.

பள்ளிக்கூடச் சம்பளமும், நன்கொடையும் கேட்கவில்லை.

"நாளை காலை ஒன்பது மணிக்கு உன் குஞ்சுகள் இரண்டையும் கூட்டிக் கொண்டுவா. மழலையர் வகுப்பில் சேர்த்துக் கொள்ளச் சொல்கிறேன். ஒழுங்காகப் பாடம் படித்தால் தொடர்ந்து படிக்கலாம். இல்லா விட்டால், பள்ளியிலிருந்து நீக்கி விடுவேன். எச்சரிக்கை" என்று கடுமையாகச் சொல்லி அனுப்பினாள்.

அம்மாச்சிட்டுக்கு, ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆனந்தமாகச் சிறகடித்துப் பறந்து கொண்டே அரசமரத்தை நோக்கிச் சென்றது. அங்கே, சின்னச் சிட்டுகள் இரண்டும், வழக்கம் போலப் பறந்து விளையாடிக் கொண்டிருந்தன.

அம்மாவைக் கண்டதும், ஆசையோடு வந்து அருகில் உட்கார்ந்து கொண்டன.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனமே எல்லாம். நீ எதை எண்ணுகிறாயோ
அதுவாகவே ஆகிறாய்.

~ கௌதம புத்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஓடமும் ஒரு நாள் வண்டியில் வண்டியும் ஒரு நாள் ஓடத்தில்

நம் முன்னவர்கள் கூறி வைத்த தத்துவங்கள், பொன்மொழிகள், பழமொழிகள் என எவையும் பொய்த்தவை அல்ல.

அந்த வகையில், ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும் வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும் என்ற நம் தமிழ் கூறும் தத்துவம் எத்துணை அற்புதம்.

ஆம், எங்கள் சொற்ப வாழ்க்கைக் காலத்தில் எத்தனை உண்மைகளை ~ கன்ம வினைப் பயன் சூழ்ந்த சம்பவங்களை நேரில் கண்டும் அறிந்தும் அனுபவித்தும் உள்ளோம். அந்த வகையில் நாம் கண்ணுற்ற சம்பவங்கள் பலவற்றை முன்னிறுத்த முடியும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. அதாவது கோட்டாபய வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்லலாம் என்ற நிலையிலேயே அவருக்கு இப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

தவிர, முன்னாள் ஜனாதிபதி மகிந்த இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு முன் பிரசன்னமாகி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

அவர் தள்ளாடித் தள்ளாடி மெல்ல மெல்ல நடந்து சென்று வாக்குமூலம் வழங்குவார் என்று அப்போது யாரேனும் நினைத்திருப்பார்களா என்ன?

அந்தோ! இந்த நாட்டின் ஆட்சி இனி ராஜபக்ஷக்களிடமே என்ற மமதையோடு, காங்கேசன்துறையில் ஜனாதிபதி மாளிகையைக் கட்டியவர் மகிந்த ராஜபக்ஷ.

தவிர, அவர் ஜனாதிபதியாக இருந்த போது காங்கேசன்துறைக் கடலில் நீச்சல் அடித்து... அடடா எப்படியெல்லாம் இருந்தவர். இப்போது நீதிமன்ற வாசல்படி ஏற வேண்டியதாயிற்று.

என்ன செய்வது காங்கேசன்துறையில் இருந்த சித்தர்களின் ஜீவசமாதிகளை உடைத்து, அதன்மேல் கட்டிய காங்கேசன்துறை ஜனாதிபதி மாளிகை இப்போது பாழடைந்து போகிறது எனில், ஜீவசமாதிகளின் கீர்த்தி எத்துணை என்பதை இதிலிருந்தேனும் நாம் அறிதல் அவசியம்.

இதைவிட இன்னுமோர் வியப்பு நடந்துள்ளது. ஆம், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அநுர அரசு தூக்குத் தண்டனை விதிக்க வேண்டும் என ஒரு குரல் ஒலிக்கிறது.

யார் அது? என்றால் வேறு யாருமல்ல. மகிந்தவின் ஆட்சியில் முப்படைத் தளபதியாக இருந்து வன்னிப் போரில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து விட்டோம் என்ற செய்தியை ஜனாதிபதி மகிந்தவிடம் கம்பீரமாக நின்று கூறிய சரத் பொன்சேகா எனும் போது தான் "யார் பெறுவார் அச்சோவே", என்ற ஞானநிலை எமக்குள் எழுகிறது.

அட! இது மட்டுமா என்றால், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சலே படும்பாட்டை "கண்கள்காள் காண்மின்களோ"

ஆம், தாங்க முடியாத சித்திரவதை. அதனால் சாகும் வரை உண்ணாவிரதம் என்று கூறுமளவில் சுரேஷ் சலே தான் செய்ததை அனுபவிக்கிறார்.

இதை நாம் கூறும் போது சான்று ஏதும் உண்டோ என்று நீங்கள் கேட்டால், "நான் சிறையில் அடைபடுவதற்கும் என் மனைவியை புலனாய்வுத்துறை தடுத்து வைத்து விசாரிப்பதற்கும் சுரேஷ் சலே தான் காரணம்" என்கிறார் சரத் பொன்சேகா.

ஆக, ஓடத்தை ஏற்றிய வண்டி இப்போது ஓடத்தில். இதுதான் இயற்கையின் நியதி.

## முன்னாள் முதலமைச்சர் விஜயலால் சில்வா கைது

(கொழும்பு)

தென் மாகாண முன்னாள் முதலமைச்சர் ஷான் விஜயலால் சில்வா, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முறையான கொள்முதல் செயல்முறைகளைப் பின்பற்றாமல், தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து 165 லட்சம் ரூபாய் (ரூ. 16.5 மில்லியன்) செலவில் நாற்காலிகளைக் கொள்முதல் செய்தமை மற்றும் அந்த நாற்காலிகள் காணாமல் போனமை ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவந்தன.

இந்த விசாரணைகளின் அடிப்படையில், 'ஊழல்' குற்றச்சாட்டின் கீழ் அவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட பின் அவரை நீதிமன்றில் முற்படுத்திய வேளை அவரை விளக்கமறியலில் வைக்க புதுக்கடை பிரதம நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ந-7)

## சுரேஷ் சலேக்கு சித்திரவதையா? குழுவை நியமித்தது மன்று

தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ள அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் தலைவர் சுரேஷ் சலே, தடுப்புக் காவலில் இருந்த போது சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளாரா? எனப் பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஐந்து பேர் கொண்ட விசேட மனநல தடயவியல் மருத்துவக் குழுமமொன்றை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று நியமித்துள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் பசன் அமரசேனவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் குறித்த மருத்துவ பரிசோதனையை கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளுமாறும் அங்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ந-7)

## நயினை நாகபூஷணியின் திருவிழாக்கால விசேட ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய உயர் திருவிழா தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது மகோற்சவ காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அதன் பிரகாரம் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய உயர் திருவிழா காலத்தில் குறிகாட்டுவானிலிருந்து ஆலயம் செல்வதற்கான படகு போக்குவரத்துக்கான ஒரு வழிக் கட்டணம் 100.00 ரூபாய் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் தினமும் முதலாவது படகுசேவை நயினாதீவிலிருந்து காலை 6.00 மணிக்கும் குறிகாட்டுவானிலிருந்து காலை 6.30 மணிக்கும் இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை நயினாதீவுக்கு கட்டடப் பொருட்களை குறிப்பாக கல் மற்றும் மணல் என்பவற்றை குறிகாட்டுவானிலிருந்து பி.ப 4.00 மணிக்கு பின்னர் எடுத்துச் செல்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் யாழ்ப்பாணம் - குறிகாட்டுவான் தனியார் மற்றும் அரச சேவை வீதிப் போக்குவரத்து சேவை கட்டணம் ரூபா 184.00 எனவும் குறிகாட்டுவான் துறை முகத்தின் உள் நுழைவு வரை வாகனங்கள் தரித்து நிற்பதனை தடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.(ந-7,104)

## வயிற்றுக்குள் மறைத்து வைத்து ஐஸ் போதைவஸ்து கடத்தல்
## பேருந்து சாரதி உயிரிழப்பு

வயிற்றுக்குள் மறைத்து வைத்து ஐஸ் போதைப்பொருளைக் கடத்திச் சென்ற சொகுசு பேருந்து சாரதி ஒருவர், அந்த போதைப்பொருள் பைக்கெட் வயிற்றினுள்ளேயே வெடித்து விசமாகியதால் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர், தெற்கு அதிவேக வீதியின் தங்காலை - மாகும்புர வீதியில் பயணிக்கும் சொகுசு பேருந்து ஒன்றில் பணியாற்றிய, ஓகவெல பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய சாரதியாவார்.

கடந்த 8ஆம் திகதி மாகும்புரவிலிருந்து தங்காலை நோக்கிச் சென்ற பேருந்து, அதன் இலக்கை அடைந்த சில நிமிடங்களிலேயே இந்தச் சாரதி திடீரென கடுமையாக நோய்வாய்ப்பட்டுள்ளார்.

உடனடியாகச் செயற்பட்டு அவர் சிகிச்சைக்காக தங்காலை ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அங்கு அவர் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் (9) தங்காலை வைத்தியசாலையில் நடத்தப்பட்ட பிரேத பரிசோதனையில், உயிரிழந்த நபரின் வயிற்றுக்குள் இருந்து போதைப்பொருள் அடங்கிய இரண்டு பைக்கெட்டுகள் மீட்கப்பட்டுள்ளது.

வயிற்றிலிருந்த அந்த இரண்டு போதைப்பொருள் பைக்கெட்டுகளில் ஒன்று உடைந்ததால், அந்தப் போதைப்பொருள் உடலின் உட்பகுதியில் இரத்தத்துடன் கலந்து ஏற்பட்ட விசமே இந்த மரணத்திற்குக் காரணம் என மருத்துவப் பரிசோதனைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## காலிமுகத்திடல் கடலில் நீராடிய மாணவன் மாயம்

(காலி)

காலிமுகத்திடல் கடலில் நீராடச் சென்ற மூன்று பாடசாலை மாணவர்கள் நேற்று (10) பிற்பகல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் அவர்களில் இருவர் மீட்கப்பட்டுள்ளதுடன், ஒரு மாணவன் காணாமல் போயுள்ளார்.

மாளிகாவத்தை பகுதியிலிருந்து வந்த சுமார் 15 வயதுடைய பாடசாலை மாணவர்கள் 6 பேரடங்கிய குழுவொன்று நீராடிக் கொண்டிருந்த வேளை அவர்களில் மூவர் அலைகளில் சிக்கியுள்ளனர்.

இதனையடுத்து அப்பகுதியில் இருந்தவர்கள் துரிதமாகச் செயற்பட்டு இரு மாணவர்களை மீட்டனர். எனினும் மீட்கப்பட்ட இருவரில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காணாமல் போனவரைத் தேடி கடற்படை சுழியோடிகள் விசேட தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7)

## வாகன விபத்து பாதசாரி மரணம்

மாவனெல்லைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாகடவர சந்திப் பகுதியில், கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த கப்ரக வாகனமொன்று வீதியைக் கடக்க முயன்ற பெண் ஒருவர் மீது மோதியதில் பிரஸ்தாப நபர் உயிரிழந்துள்ளார்.

நேற்று(10) அதிகாலை ஏற்பட்ட இந்த விபத்தில் படுகாயமடைந்த அப்பெண், மாவனெல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.


உயிரிழந்தவர் கணேதென்ன, ஹிங்குல பகுதியைச் சேர்ந்த 69 வயதுடையவர் ஆவார்.

கப்ரக வாகனத்தின் ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பாக மாவனெல்லை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் மாதம் முதல் இலங்கையில் எல் நினோ தாக்கம்

## வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை



(கொழும்பு)

எதிர்வரும் மாதம் முதல் இலங்கையின் வானிலையில் 'எல் நினோ' காலநிலை மாற்றம் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள் ளது.

இந்த நிலைமையானது தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழைக் காலநிலையின் மீது நேரடித் தாக்கத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளதாக வளி மண்டலவியல் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

பசுபிக் பெருங்கடலில் முன்னதாக எல் நினோ நிலைமை உருவாகியுள்ள நிலையில், அதன் தாக்கம் பல்வேறு கட்டங்களாக சுமார் 11 மாதங்களுக்கு நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் வானிலை நிலவரங்களில் எல் நினோ தாக்கத்தினால் ஏற்படக்கூடிய சாத்தியமான பாதிப்புகளை எதிர் கொள்வதற்கும், அது குறித்து எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (நி)

# சரிவிலிருந்து மீண்டது இலங்கை ரூபா



(கொழும்பு)


அமெரிக்க டொலருக்கு நிகராக வீழ்ச்சியடைந்து வந்த இலங்கை ரூபா, மீண்டும் வலுவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இதன்படி, நேற்றைய தினம் அமெ ரிக்க டொலரின் கொள் வனவு விலை ரூ. 324.66 ஆகவும், விற்பனை விலை ரூ. 335.39 ஆகவும் பதிவாகியுள்ளதாக இல ங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி)

# அலங்கார உற்சவம்

(கரணவாய்)

மயிலிட்டி வீரமாணிக்கன் தேவன்துறை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கும்ப பூசையுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 21 நாட்கள் வரை நடைபெறும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 29 ஆம் திகதி திங்கட்கிழமை சமுத்திரத் தீர்த்தமும் இடம் பெறும். (8-60)



வடமாகாண பாடசாலைகள் கராத்தே போட்டியில் 20 வயது பெண்கள் பிரிவில் பங்குபற்றிய மகாஜனக் கல்லூரியின் ஐ.மிஷாஜினி வடமாகாண பாடசாலைகளின் பெண்கள் பிரிவில் சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் 20 வயது பெண்கள் பிரிவு கராத்தே போட்டியில் கட்டா நிகழ்விலும் குமுத்தே நிகழ்விலும் தங்கப்ப தக்கங்களை வென்றுள்ளார்.

# கலைத்துவம் மேலோங்கி நின்ற பச்சிலைப்பள்ளியின் பெருவிழா

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் பாரம்பரியக் கூத்து இசை நாடக கலைஞர்களும் இணைந்து நடாத்திய இசை நாடக கூத்து பெருவிழா 08.05.2026 வெள்ளிக் கிழமை அன்று மாலை 6 மணிக்கு பளை பொது விளை யாட்டு மைதானத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

விழாவின் பொருட்டு விழா அரங்கு மற்றும் A9 வீதி பளை பஸ் நிலையம் எங்கும் மகர தோரணங்கள், பூச்சரங்கள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மங்கள வாத்தியம் முழங்க விருந்தினர் பஸ் நிலையத்திலிருந்து மாலை மரியாதையுடன் விழா முற்றத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றமை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

மிகவும் சிறப்பாக அலங்கரிக் கப்பட்ட நாடக அரங்கு கண்ணைப் பறிக்கும் வண்ணம் அழகாகக் காட்சி அளித்தது.

விருந்தினர் மண்டபம் மேடை க்கு அணித்தாக அமைக்கப்பட்டு அவரவர்களுக்கு இருக்கைகள் ஒதுக்கப்பட்டு நேர்த்தியாக இருந்தது.

ஆளுநர், பாராளுமன்ற உறுப்பினரின் பிரதிநிதி, மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், பிரதேச சபை தவிசாளர், கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் கலைஞர்கள் என விருந்தினர்கள் அழைக்கப்பட்டு இருந்தார்கள்.

பரதக்கலை ஆடல் வடிவங்க ளோடு வரவேற்பு நடனம் கண் ணுக்கு விருந்தாக அமைந்தது. விருந்தினர் உரைகள் அடுத்து இடம்பெற்றன. ஆளுநர் தனது உரையில் வழமையான பிர தேச செயலகங்கள் நடத்துகின்ற பண் பாட்டுப் பெருவிழாக்கள் சுற்று நிருபத் துக்கு அமைவாக நடத்தப்படுகின் றன.

இந்த விழாவோ கலைஞர்க ளுக்காக ஊர் மக்களின் பங்களிப்பு டன் பிரதேச செயலகத்தின் அனுசர ணையோடு பச்சிலைப்பள்ளிக்கே உரித்தான மண் வாசனையோடு சுதந்திரமாக நடத்தப்படும் பெருவிழா எனக் குறிப்பிட்டார்.

இந்தப் பெருவிழாவை முழு மனதோடு வடிவமைத்து நெறிப் படுத்தி நடத்துகின்ற பிரதேச செயலர் கவிஞர் த. ஜெயசீலன் அவர்களின் கலை உள்ளத்தை வெகுவாக பாராட்டி மகிழ்ந்தார்.

எமது மண் ணுக்கே உரித்தான பாரம்பரிய கூத்து இசை நாடகம் என்பன பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் கிராமத்து அரங்கு களிலே அது பயிலப்பட வேண்டும்.

அந்த வகையில் இந்த விழாக்கள் மிக தேவையானவை உதவியா னவை எனக் குறிப்பிட்டார்.

ஏனையவர்களின் உரைகளும் இக் கருத்தை பிரதிபலிப்பனவாக இருந்தன. இசை நாடகக் கூத்துப் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்கு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் வகை செய்ய வேண்டும் என்ற கருத்தும் விருந்தினர் பக்கத்தில் முன்வைக்கப்பட்டது.

உண்மையில் பாடசாலை மட் டத்தில் இவ்வாறான கலைகள் புகுத்தப்பட்டால் மாணவர்கள் அதை பயின்று இக் கலையை வளர்ப்பதற்கு முன் னிற்பார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.



மேலும் நிகழ்வின் முத்தாய்ப்பாக "பாரம்பரிய கலாவித்தகர்" என்ற விருது மரபுக் கலைத்துறைக்கு பங்காற்றி வரும் மூத்த கலை ஞர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. "கலாபூஷணம்" கந்தையா ஆறு முகம், "கலாபூஷணம்" செல்லையா தனபாலசிங்கம், "கலா பூசணம்" செல்லையா சுந்தரம்பிள்ளை, "கலா பூஷணம்" இராசையா பரராஜ சிங்கம், "கலைக்கிளி" மிக்கேல் அலேஸ் என்பவர்களுக்கு ஆளுநர் நா.வேதநாயகன் விருதுகளை வழங்கினார்.

நிகழ்வின் முக்கிய கலை நிகழ்வுகளாக பிரதேசக் கலைஞர்க ளுடைய சத்தியவான் சாவித்திரி இசை நாடகம், ஞானசௌந்தரி தென்மோடிக் கூத்து, அரிச்சந்திர மயான காண்டம் இசை நாடகம், காத்தவராயன் சிந்துநடை கூத்து என்பன இடம்பெற்றன.

பெரும் தொகையான மக்கள் வருகை தந்து நிகழ்வுகளை மகிழ்வுடன் கண்டு களித்தனர். பளை விளையாட்டு மைதானம் அன்று இரவு முழுவதும் கோலாகலமாக இருந்தது. நீண்ட நாட்களுக்கு பின்பு அந்த இரவு மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்ற பொழுதாக பச்சிலைப் பள்ளி வாழ் மக்களுக்கும் கலை ஞர்களுக்கும் அமைந்திருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

இவ்வாறான பொழுதுகள் எம் மக்களுக்கு மறுபடியும் மறுபடியும் கிடைக்க வேண்டும். இதுவே அனைவரினதும் பெருவிருப்பம்.

**நா.விமலநாதன்**
**செயலாளர்- யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். போதனாவில்...

அமைச்சர் ஹங்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

அந்த விசாரணையின் அடிப்படையிலான முடிவுகள் விரைவில் கிடைக்கப்பெறும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருந்து களஞ்சியத்தில் அண்மையில் தீ விபத்து ஏற்பட்டமை தொடர்பில், அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் இராமநாதன் அருச்சுனா நேற்று (10) பாராளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பிரதி சுகாதார அமைச்சர் ஹங்சக விஜேமுனி மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியத்தில் இடம்பெற்ற தீ விபத்து அபாயகரமானதாகும்.

குறிப்பாக மருந்துகள் தொடர்பான விபரங்கள் டிஜிட்டல் மயப்படுத்தப்படுகின்றபோது இந்தச் சம்பவம் பதிவானமை, மிகவும் அபாயம் மற்றும் சந்தேகத்திற்குரியதாகப் பார்க்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் உரிய விசாரணை நடத்துமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

விரைவில் அந்த விசாரணை நடவடிக்கைகளின் முன்னேற்றம் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கின்றோம் என்றார். (ந-7)






















## தொல்லியலாளர்கள்...

நெதர்லாந்து நாட்டின் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் குழு, வடக்குப் பகுதிகளில் விரிவான ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

குறித்த நிபுணர்குழு யாழ்ப்பாணத்தில் 15 நாட்கள் தங்கியிருந்து பல்வேறு தொல்லியல் மற்றும் நிலவியல் சார்ந்த ஆய்வுகளை முன்னெடுக்கவுள்ளது.

இந்த ஆய்வுகளின்போது நிலத்தின் தன்மை, நிலத்தடியில் காணப்படும் தொன்மைச் சுவடுகள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அமைப்புகள் தொடர்பான தரவுகள் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் உதவியுடன் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றன.

குறிப்பாக நல்லூர், நெடுந்தீவு மற்றும் காரைநகர் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவிலான கள ஆய்வுகள் இடம்பெற்று வருகின்றன. (ந-7)

## தொல்லியல் ஆய்வு...

முன்னெடுக்கப்படவிருந்த நடவடிக்கைகளுக்கு காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் ஆகியோர் இணைந்து கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

மக்களின் கடுமையான எதிர்ப்பு மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் தலையீட்டை அடுத்து தொல்லியல் திணைக்களத்தினரும் வெளிநாட்டு நிபுணர்களும் தமது ஆய்வு முயற்சிகளைக் கைவிட்டு அங்கிருந்து திரும்பினர். (ந-7)

## சங்கீத்தனை...

சிவில் சமூக அமைப்புக்கள் இணைந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சொல்லிசைப் பாடகர் சங்கீத்தனை உடனடியாக விடுதலை செய்வதுடன், அச்சட்டத்தை முற்றாக நீக்குமாறு வலியுறுத்தி நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகக் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை நடத்தினர்.

இப்போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த சிவில் சமூகப்பிரதிநிதிகள்; 'அரச பயங்கரவாதத்திலிருந்து மக்களைக் காப்பது யார்?', 'தேசிய மக்கள் சக்தி அரசே, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்று', 'பயங்கரவாதத்தடைச்சட்டதை நீக்கு', 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவை மீளப்பெறு', 'பயங்கரவாதச் சட்டங்கள் வேண்டாம்', 'தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வாக்குறுதியை மீறிவிட்டது', 'கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம் மீது கைவைப்பதை நிறுத்து' என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் கோஷங்களையும் எழுப்பினர். (ந-7)

## பயங்கரவாதத்...

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையில் தொலைபேசி உரையாடல் நடைபெற்றுள்ளது.

இதன்போது சங்கீத்தனுக்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கப்படாமையின் காரணமாக சாதாரண நீதிமன்ற முறைமையின் கீழ் அவருக்கான பிணைக்கோரிக்கையை சட்டத்தரணிகள் ஊடாக விடுக்க முடியும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சிறீதரன் எம்.பியிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, அமைச்சர் சந்திரசேகருக்கும் சிறீதரன் எம்.பிக்கும் இடையில் பாராளுமன்ற வளாகத்தில் உரையாடலொன்றும் நடைபெற்றுள்ளது.

அந்த உரையாடலின் போதும், ஜனாதிபதி அநுரவின் அறிவிப்புத் தொடர்பில் அமைச்சர் சந்திரசேகர் வெளிப்படுத்தியதோடு சங்கீத்தனின் தாயாருடனும் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு உரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## நீதிபதி...

வைத்துள்ளனர். நீதிபதிகளின் இடமாற்றம், பதவி உயர்வு மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் போன்றவற்றில் நிறைவேற்று அதிகாரமோ அல்லது அரசாங்கமோ எவ்விதத்திலும் தலையிடுவதில்லை.

அரசியலமைப்பின் ஊடாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள சுயாதீன நீதிச் சேவை ஆணைக்குழுவின் ஊடாகவே அப்பணிகள் அனைத்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்தகால அரசாங்கங்கள் அரசியல் தலையீடுகளுடன் நீதிபதிகளை இடமாற்றம் செய்திருக்கலாம். ஆனால் நமது அரசாங்கம் ஒருபோதும் அவ்வாறு செய்யப்போவதில்லை. இது குறித்து எவருக்கேனும் ஆட்சேபனைகள் காணப்பட்டால், அவர்கள் நீதிச் சேவை ஆணைக்குழுவை நாடி அதற்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றார். (ந-7)

## 21 ஆம் நாள்...

அகழ்வின் 21 ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்றையதினம் புதன் கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிபதி எஸ்.லெனின்குமார் முன்னிலையில் இடம்பெற்றது.

இதன்போது 12 மனித என்புக்கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டதுடன் ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட நான்கு சிறுவர்களது என்புக்கூடுகள், இரண்டு சிசுக்களின் என்புக்கூடுகள் உள்ளடங்கலாக 7 என்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இரண்டு மாடுகளின் எலும்புக்கூடுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன . இதுவரை அடையாளம் காணப்பட்ட 339 என்புக்கூடுகளில் 318 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(ந-7,33)























Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

1 ஆம் ஆண்டு

# நினைவு தின அழைப்பு



கடந்த 21.06.2025 அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் நாகமுத்து நவரத்தினம்

**(தொழிலதிபர் - நவரத்தினம் தச்சுத் தொழிலகம்)**

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (11.06.2026) வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரர்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன அழைக்கின்றோம்.

நவரத்தினம் தச்சுத் தொழிலகம்
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
(இணுவில்) (2407)

தகவல்:-
குடும்பத்தினர்


## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Restaurant இற்கு உணவு பரிமாறுபவர்/ சுத்திகரிப்பாளர் தேவை. (7820)

தொடர்புகளுக்கு :
**076 830 3931**



## தேவை

1. பொதியிடல்(பெண்கள்)
2. மில் வேலை தெரிந்தவர்கள்

பழக விரும்புவர்கள்
(ஆண், பெண்) (2408)

தொடர்புகளுக்கு :
**076 440 0816**



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5812)

**076 825 7716** (ஆகாஸ்)


## பதிலளிப்பதற்கு முன் நிதானியுங்கள்

ஒரு உணர்ச்சியான பதில் வெறுப்பின் அலையை பற்றவைக்கலாம்.
ஒரு நிமிட சிந்தனையின் மூலம் அதைத் தடுக்க முடியும்.

பகிர்வதற்கு முன் உங்களையே கேளுங்கள்:

- இந்த தகவல் உண்மையா?
- இதை பரப்புவதால் யாருக்கு நன்மை?
- இதனால் யார் பாதிக்கப்படலாம்?


அமைதியான சிந்தனை வெறுப்புப் பேச்சை தோற்கடிக்கும்.
சிந்தனை அமைதியைப் பாதுகாக்கும்.

இந்த தகவல் SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது. (7775)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378, 076 097 3127**


# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 - 01 - 1930 | 10 - 06 - 2026 |



## ஜீவரெட்ணாவதி இராசரெத்தினம்

யாழ்ப்பாணம் ஆரியகுளம் பலாலி வீதி முதலாம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வதிவிடமாகவும் நல்லூர் இலக்கம் 46, இராணி வீதியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜீவரெட்ணாவதி இராசரெத்தினம் அவர்கள் நேற்று (10.06.2026) புதன்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான கமலேஸ்வரி, வரதலிங்கம், பராசக்தி + புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - சிவகாமிஅம்மா தம்பதிகளின் இளைய மருமகளும் இரத்தினகாந்தீஸ்வரி (அமரர்), ஜெகதீஸ்வரி (Germany), சிவாஜினி (கொழும்பு), இரவீந்திரன் (London), குகேந்திரன் (USA), பாலேந்திரன் (London), தனேந்திரன் (நல்லூர் Joga Book Shop), லோஜினி (Denmark) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான காங்கேஸ், மோகனதாஸ், குகதாஸ் மற்றும் சொருபினி, வித்தியா, நளினி, குணசுகி, சிதம்பரநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் குகான்நாத், சிந்துஜா, லினுஜா, யதுசா, பவிசா, தர்சா + தர்சினி + தயாமோகன், மயூரிக்கா, யதுசிக்கா, சர்மிதா, தன்னியா, வர்ஷா, வர்ஷனா, சுஜானன், பிரதீப், ஆதீகா, சஞ்ஜீவன், பிரணவிக்கா, சியாளினி, சிபோதினி, சாட்ஷாயினி, காந்தரூபன், சிந்துஜன், சுகாசினி, பிரகாஷ், லதன், யாதவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டீனத், நிவிஷா, கியாஷ், தனிஸ்கா, கைரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (11.06.2026) வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் இல.46, இராணி வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : மகன் தனேந்திரன்
Joga Book Shop
077 601 0977

இல.46, இராணி வீதி,
செம்மணி வீதி, நல்லூர். (7827)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 - 02 - 1973 | 09 - 06 - 2026 |



## ஜியிதா நிசாகரன் (பவுண்)

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜியிதா நிசாகரன்(பவுண்) அவர்கள் கடந்த 09.06.2026 செவ்வாய்க் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - அன்னம்மா தம்பதியினரின் இளைய புதல்வியும் சின்னத்தம்பி - கமலம் தம்பதியினரின் மூத்த மருமகளும் சின்னத்தம்பி நிசாகரன் அவர்களின் (நிர்வாக உத்தியோகத்தர் - விளையாட்டுத் திணைக்களம், வடமாகாணம்) அவர்களின் அன்பு மனைவியும் சங்கீரணி, தரங்கினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாஸ்கர், வனிதா, அமுதா, சிறீதர் ஆகியோரின் அன்புத் தங்கையும் துரைசிங்கம், காலஞ்சென்ற ஜோன்சன் மற்றும் பைங்கிளி, ஞானசீலி, வசீகரன், சுமன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2026) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (மானிப்பாய் வீதி, கைதடி) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஐவினைப் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மானிப்பாய் வீதி,
கைதடி மேற்கு. (2406)

தகவல் : குடும்பத்தினர்
077 997 9659, 077 985 9369

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media